**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.90/2017**
**வழக்கு சாட்சி PW – 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கங்காதேவி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 22th, 2024.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் செங்கோட்டை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து, தற்போது நீண்ட விடுப்பில் உள்ளேன். நான் செங்கோட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, கடந்த 11.10.2015ம் தேதியன்று இரவு 08.50 மணியளவில் வல்லம், மணிநாடார் தெருவைச் சேர்ந்த அரசமுத்து என்பவரது மகன் ஸ்டீபன் சரண்ராஜ், வயது 20 என்பவரை அவரது சகோதரர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். நான் அவரை பரிசோதித்தபோது, அதே நாள் இரவு 08.00 மணியளவில் இனம் தெரிந்த நபர் ஒருவர் தன்னை அரிவாளால் வெட்டியதாகக் கூறினார். அவர் வலது கை மணிக்கட்டில் 15x10x3 செ.மீ அளவிற்கு ஆழமான வெட்டுக்காயம் இருந்தது. எலும்பு வெளியே தெரிந்து கொண்டிருந்தது. அவருக்கு வலது கை அசைக்க முடியவில்லை என்று கூறினார்.

அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, மேல்சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவர் நாகர்கோவிலில் தனியார் மருத்துவமனையில் எடுத்த சிகிச்சை விபரங்களை பார்த்து, அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று அளித்தேன். நான் அளித்த காயச்சான்று அ.சா.ஆ.8. நீளமான வாளை வைத்து வெட்டும்போது, அதை கையால் தடுக்கும் போது, மேற்கண்ட காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.90/2017</u>**
**<u>வழக்கு சாட்சி PW – 10</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 22nd, 2024.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது நாகர்கோவில், திரவியம் எலும்பு முறிவு மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.10.2015 ம் தேதியன்று நான் அங்கு பணியில் இருந்தபோது, திரு.ஸ்டீபன் சரண்ராஜ் என்ற 20 வயது ஆண் சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனையில் 02.20 மணியளவில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு 11.10.2015 ம் தேதி, 21.30 மணியளவில் வல்லம் அருகே நடந்த தாக்குதல் சம்பவத்தில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது, வலது உள்ளங்கையில் முன்புறமாகவும், உள்புறமாகவும் 12x6x2.5 செமீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அவருக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் மணிக்கட்டு பகுதியில் உள்ள மணிக்கட்டு முத்தெலும்புகளில் ஒன்று உடைந்து காணப்பட்டது. அந்தக் காயம் மணிக்கட்டு பகுதியை நோக்கி செல்வதாகவும், அறுபட்ட அசைவு நரம்புகளும்,

இரத்தக்குழாய்களும் வெளியே தெரியும்படி காணப்பட்டது. காயத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அதே தினம் அவருக்கு வலது கை விரல்களை உள்நோக்கி மடக்கும் அறுப்பட்ட நரம்புகளை சரிசெய்யும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவர் சிகிச்சை முடிந்து, 15.10.2015 ம் தேதியன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். நான் அளித்த சான்று அ.சா.ஆ.9. இந்தக் காயம் வாளால் வெட்டும்போது, அதை கையால் தடுக்கும் போது, ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

எங்களிடம் காயம்பட்ட நபர் சரியாக எந்த இடத்தில் வைத்து தாக்கப்பட்டார் என்று கூறாமல், வல்லத்திற்கு பக்கம் என்று தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். விசாரணை அதிகாரி என்னிடம் வாளை காண்பித்து அந்த வாளால் வெட்டினால் இந்த காயம் ஏற்படுமா? என்று என்னிடம் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் பொது மருத்துவம் தான் படித்துள்ளேன் என்றாலும், நான் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை நிபுணர் இல்லை என்றாலும் சரிதான். நான் குறிப்பிட்ட காயங்களின் அளவுகள் சம்பந்தப்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த எலும்பு முறிவு அறுவை சிகிச்சை நிபுணரால் மட்டும் தான் கூறமுடியும் என்றால் சரியல்ல. காயம்பட்டவருக்கு ஏற்பட்ட இந்தக் காயம் ஓடிச்செல்லும்போது கீழே விழுந்தாலோ அல்லது ஒரு கூர்மையான இரும்பு பொருளின் மீது மோதினாலோ ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.90/2017</u>**
**<u>வழக்கு சாட்சி PW – 11</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயசங்கரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 22th, 2024.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் செங்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் செங்கோட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 12.10.2015 ம் தேதி, 12.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, வல்லம் மணிநாடார் தெரு, ராஜாமணி மகன் அரசமுத்து என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று , அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.235/2015, சட்டப்பிரிவுகள் 294(பி) மற்றும் 307 இதச வின் படி வழக்கு பதிவு செய்து, அதன் அசலை செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும்

வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.10. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

11.10.2015 ம் தேதி, இரவு 08.30 மணிக்கு நடந்ததாக புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் அடுத்த நாள் மதியம் 12.00 மணிக்கு தான் சம்பவம் குறித்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்பட்ட நேரத்திற்கும், காவல் நிலையத்தில் ஆஜராகி புகார் கொடுத்த நேரத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் மருத்துவமனையில் இருந்தோ அல்லது வல்லம் ஊரிலிருந்தோ இந்த சம்பவம் குறித்து எந்த புகாரும் வரவில்லை என்றால் சரிதான். 15.30 மணிநேரம் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கு எந்தக் காரணமும் புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகார் மனுவை யார் எழுதினார்கள்? என்ற விபரத்தை நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. புகார்தாரர் இந்த சம்பவத்தை யார் மூலம் தெரிந்து கொண்டு புகார் கொடுப்பதாக புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எதிரிகள் திட்டியதால், அவமானம் ஏற்பட்டதாக சொல்லியும், அதுபோல் சம்பவத்தை யார் மூலம் தெரிந்து கொண்டார்களோ, அவர்களுக்கும் அவமானம் ஏற்பட்டதாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் காலப்பிற்படாக பெறப்பட்ட புகார் மனுவின் பேரில் ஒரு பிழையான முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.